பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Time Reader
1/AM. 
1/45AM.
1:55AM
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (22-10- 995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 334

● வாழ்வா, சாவா என்ற நெருக்கடி நிலை

# அன்னை மண்ணைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்துமாறு அவசர அழைப்பு

## இளைஞருக்கு புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 22

குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றிவிடுவது என்பதில் சிங்கள அரசு உறுதியாகவே உள்ளது.

இது ஈடேறுமா இல்லையா என்பதனை தமிழரின் படை பலமே தீர்மானிக்கும்.

வாழ்வா, சாவா என்றொரு நெருக்கடி நிலையே இன்று எம் முன் உள்ளது.

போராடினால் வாழ்வு பயந்தோடினால் சாவு என்றொரு நிலையே உள்ளது.

குடாநாட்டின் மடியில் தவழும் இளைஞர்களே, யுவதிகளே உங்கள் அன்னை மண்ணைப் பாதுகாக்க அனைவரும் உடனடியாக ஆயுதம் ஏந்துங்கள்.

*தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-*

கடந்த ஒரு சில நாட்களில் குடாநாட்டுப் போர் புதியதொரு பரிமாணத்தை அடைந்துவிட்டது. பலாலி படைத்தளத்தின் எல்லைகளை விஸ்தரிப்பது என்ற நோக்குடன் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் என்ற

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு நகரில் பெரும் கொந்தளிப்பு!

### இரு தமிழர்கள் அடித்துக் கொலை

கொழும்பு, ஒக். 22

தலைநகர் கொழும்பில் பெரும் கொந்தளிப்பு நிலை உருவாகியிருப்பதாக நேற்று நள்ளிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எந்நேரமும் எதுவும் நிகழக்கூடிய அபாயகரமான சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

கொழும்பு நகரில் நேற்று இரண்டாவது நாளாக பல இடங்களிலும் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

பாலத்தடியில் உள்ள நவலோகபுரியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர்.

எண்ணெய்க் குதங்கள் மீது தாக்குதல் நடத்திய ஆயுத பாணிகள் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே இவர் பலி

(7ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இரவு ஊரடங்கு

கொழும்பு மாநகரசபை பிரதேசம், கொலன்னாவை பிரதேச செயலகப் பகுதி, களனி பிரதேச செயலகப் பகுதி, வெலிக்கடை பொலீஸ் பகுதி ஆகிய பிரதேசங்களில் நேற்று மாலை 6 மணி முதல் ஊரடங்கு அமுலுக்குவந்தது.

இன்று காலை 5 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

# புத்தூர் நவக்கிரி பகுதியில் நேற்று படையினர் புலிகள் உக்கிரச் சமர்!

### டாங்கிகள், பவள் சேதம்! 12 போராளிகள் வீரச்சாவு!!!

யாழ்ப்பாணம், ஒக். 22

புத்தூர், நவக்கிரிப் பகுதிகளில் இருந்து பெரும் எடுப்பில் முன்னேற முற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நேற்று பாரிய தாக்குதலை நடத்தி இராணுவத்தினருக்கு பெரும் இழப்புகளை ஏற்படுத்தினர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு நவக்கிரி, புத்தூர் பகுதிகளில் இருந்து படையினர் பெரும் எடுப்பில் முன்னேற முயற்சிகளை மேற்கொண்டனர்.

டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் அகோர ஷெல் தாக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு எல்லைக் கிராமங்களில் 73 சிங்களவர் கொலையுண்டனர்!

### 3 இடங்களில் ஆயுத பாணிகள் தாக்குதல்

கொழும்பு, ஒக். 22

கிழக்கில் 73 சிங்கள மக்கள் ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டுள்ளனர் என்று பி பி ஸி. மற்றும் வெரித்தாஸ் வானொலிகள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் இந்த கொலைகள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று எல்லைக் கிராமங்களிலேயே ஆயுத பாணிகளால் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

வெலிகந்த பகுதியில் 31 பேரும் —

அம்பாறை மாவட்டம் மங்கலகமவில் 16 பேரும் —

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய நிபுணர்கள் வந்தும் தீ முற்றாக அணையவில்லை

கொழும்பு, ஒக். 22

இலங்கை அரசாங்கத்தின் அவசரகோரிக்கையை அடுத்து இந்தியாவில் இருந்து நான்கு தீயணைப்பு நிபுணர்கள் கொழும்பு வந்துள்ளனர். மற்றும் தீயை அணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்கள், இரசாயனப் பொருள்கள் ஆகியவையும் எடுத்து வரப்பட்டுள்ளன. இவை தனி விமானத்தில் வந்து சேர்ந்தன.

எனினும் கொலன்னாவை, ஊறுகொடவத்தை எண்ணெய்க் குதங்களில் தீயை முற்றாக அணைக்கமுடிய

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா வந்த பயணிகள் மீது படையினர் கண்டபடி தாக்குதல்!

### பல மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 22

கொழும்பில் இருந்து வடபகுதி நோக்கி வந்த பயணிகள் நேற்று முன்தினம் வவுனியாவில் வைத்துப் படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர்.

ஆண், பெண் என்ற வேறுபாடின்றி பயணிகள் அனைவரையும் தடுத்து வைத்த படையினர் அவர்களை கண்டபடி தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான பயணிகளில் பெரும்பாலானோர் யாழ்தேவி ரயில் மூலம் நேற்று முன் தினம் வவுனியாவுக்கு வந்து சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

[illegible]

## கொழும்பில் பலருக்கு இருமல், தொண்டைவீக்கம்

கொலன்னாவை, ஊறுகொடவத்த ஆகிய பெற்றோலியக் களஞ்சியங்களில் இருந்து வெளியேறிய புகையை சுவாசித்த பலருக்கு கொழும்பில் இருமல், தொண்டை வீக்கம் போன்ற நோய்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நோய்கள் தற்காலிக பிரச்சினைகள் என்றும்—

இவை நீண்ட காலம் இருக்கமாட்டா என்றும்—

ஆகையால் இத்தகைய நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் பயப்படத் தேவை இல்லை என்றும் கொழும்பு பெரியாஸ் பத்திரியைச் சேர்ந்த சிரேஷ்ட மருத்துவ நிபுணர் டாக்டர் நந்தா அமரசேகர தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மண்ணைப் பாதுகாக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டத்தில் இருந்து, இப்போது குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான இறுதிப் படையெடுப்பு என்கின்ற நிலைக்கு, போரின் பரிமாணம் மாறிவிட்டது.

கடந்த திங்கட்கிழமை (16-10-95] 'சன்சைன்' என்ற பெயரில் சிங்களப்படைகள் ஆரம்பித்த இராணுவநடவடிக்கை பலாலித்தளத்தின் எல்லைகளை விரிவுபடுத்தும், வரையறுக்கப்பட்ட நோக்கம் கொண்டது அல்ல. மாறாக குடாநாட்டை முழுமையாக கைப்பற்றுவதற்கான, ஆரம்ப கட்ட இராணுவ நடவடிக்கையே அதுவாகும். சிங்கள அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல்ரத்வத்தை, சிங்கள இராணுவத் தளபதிலெப். ஜெனரல் ஜெரி. டி. சில்வா மற்றும் விமானப் படைத் தளபதிஆகியோர் நேரடியாகப் பலாலி வந்து குடாநாடுமீதான அந்தஇறுதிப் படையெடுப்பின் ஆரம்ப விழாவிற்கு ஆசிகூறிச்சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தகுந்த பதிலடி கொடுக்கிறோம்

ஆயினும், 'சன்சைன்' இராணுவ நடவடிக்கைக்கு புலிவீரர்கள் தகுந்த பதிலடி கொடுத்து, படையினர்க்கு கணிசமான இழப்பை ஏற்படுத்தியுள்ளனர், எதிர்தரப்பில் அதிகளவு உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிரியின் படை நகர்வு முயற்சிகளை தடுத்து நிறுத்த முடியும் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

குடாநாட்டை பூரணமாக கைப்பற்றுவதன் நோக்கம் இயன்றளவுக்கு புலிவீரர்களை கொன்றுதள்ளி - புலிகள் இயக்கத்தின் முதுகெலும்பை முறிப்பதே, என அரசதரப்பில் இருந்து காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன ஆனால் போர் என்ற போர்வையில் முடிந்தளவுக்கு தமிழர்களைக் கொன்று வாழ்விடங்களில் இருந்து அவர்களை விரட்டியடித்து — அவர்களது பொருளாதார பண்பாட்டு வேர்களை அறுத்தெறிந்து இனப்படுகொலை புரிவதுதான் அரசபடைகளின் இலக்காக உள்ளது —

### தமிழினப் படுகொலையே நோக்கம்

இந்த நோக்கத்துடன், புலிவீரர்கள் மீது பயன்படுத்தும் அதே அளவு படைக்கலங்களை போர் முனைக்கு அப்பால் உள்ள குடிமனைகள் மீதும் பயன்படுத்தி புலிகளையும் மக்களையும் கொல்லும் ஒரு தமிழினப்படுகொலையில் சிங்களப் படைகள் இறங்கியுள்ளன.

குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றி விடுவது என்பதில், சிங்கள அரசு உறுதியாகவே உள்ளது. இது ஈடேறுமா? இல்லையா? என்பதை தமிழரின் படைப்பலம் தான் தீர்மானிக்கும். ஆயினும், குடாநாட்டை விழுங்கும் இலட்சியத்திற்காக கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதியை இழந்து தியாகம் செய்யும் அளவுக்கு, சிங்கள அரசு உள்ளதை இங்கு நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.

3 ஆயிரம் ச. கி. மீற்றருக்கும் மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட கிழக்கு மாகாணத்தை புறந்தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக 400 ச. கி. மீற்றர் பரப்பளவைக் கொண்ட குடாநாட்டைக் கைப்பற்ற தனது படைப்பலம் அனைத்தையும் ஒருங்கிணைத்துள்ள சிங்கள அரசின் தீர்மானத்தின் பின்னாலுள்ள அபாயத்தை குடாநாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். குடாநாட்டைக் கைப்பற்றுவது என்பது வெறுமனே குடாநாட்டின் நிலங்களை கைப்பற்றுவது என்று அர்த்தமாகாது. அல்லது அரசுகூறுவதைப்போல குடாநாட்டில் சிவில் நிருவாகத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவும் அது இருக்கமாட்டாது. அல்லது புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தி விட்டு அரசியல் தீர்வொன்றை தமிழர்களுக்கு வழங்கும் விவகாரமாகவும் அது இருக்கமாட்டாது.

### பெரும் நாசகார நோக்கம்

உண்மையில் தமிழினத்துக்கு பேரழிவை உண்டு பண்ணும் ஒரு நாசகார நோக்கத்தையே அது கொண்டிருக்கின்றது. குடாநாட்டில் வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்களையும் இந்த மக்களின் பொருளாதார வளத்தையும் இந்த இரண்டும் இணைந்து வெளிப்படுத்தும் போராட்ட உறுதியையும் அழிப்பது தான் குடாநாட்டுப் படையெடுப்பின் இராணுவ நோக்கமாகும்.

இவற்றை அழித்து — துவம்சம் செய்வதன் மூலம் தமிழ் இனத்தின் தனித்துவத்தை இந்தத் தீவில் இருந்து பூண்டோடு பிடுங்கி எறிந்துவிட்டு கதிர்காமர்களைப் போல டக்ளஸ் தேவானந்தாக்களைப் போல சிவசிதம்பரங்களைப் போல இனத் தனித்துவமற்ற தமிழர்களை காட்சிப் பொருளாக இத்தீவில் உலாவவிடுவதுதான் சிங்களப் பேரினவாதத்தின் நெடுநாளைய ஆசை. இந்த வரலாற்று ஆசையை குடாநாட்டு படையெடுப்பு என்ற கோதாவில் அரங்கேற்றி விட சிங்கள அரசு சகல முன்னேற்பாடுகளையும் செய்து விட்டது.

### போராட்டத் தடையும் வரும்

குடாநாடும் அதன் மக்களும் சிங்களப் படைகளின் கைளில் வீழ்ந்தால் மேலதிகமாக இன்னுமொரு தடையை விதிக்க அரசு காத்திருக்கின்றது போராட்டத் தடையே அதுவாகும். போராடும் நிலையில் இருக்கும் இளைஞர்களை — இளம் பெண்களை கொன்று தள்ளியும் சிறையில் அடைத்தும் போராட்டத் தடையை, அரச படைகள் அமுல் படுத்தும் இப்படி நடக்க உலகம் விடாது என்று கற்பனையில் நாங்கள் காலத்தைக் கழிக்க முடியாது.

### உலகில் நடந்த கோர நிகழ்வுகள்

உலக வரலாற்றில் இப்படிப்பல கோரச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இஸ்ரேல் இதைத்தான் பாலஸ்தீன மக்களுக்குச் செய்தது. இந்தோனீசிய இராணுவத்திடம் இருந்து வந்த இத்தகைய ஒரு அபாயம் தான் கிழக்கு தீமோர் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினரை பலி கொண்டிருந்தது. இவற்றிற்கு எதிராக, உலகம் கண்ணீர் விட்டு -கண்டன அறிக்கைகளை வெளியிட்டது உண்மைதான். ஆனால் பாலஸ்தீனர்கள் அகதி முகாம்களில் தான் அல்லல் பட்டனர். கிழக்கு தீமோர் மக்களில் பெரும்பகுதியினர் இனப்படுகொலையால் அழிக்கப்பட்டனர்.

### தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தம்

வரலாற்றில் என்றோ ஒரு தடவை அல்லது சில தடவைகள் ஒரு தேசத்தின் மக்கள் ஒன்றாகத் திரண்டெழுந்து, ஆபத்தொன்றிற்கு எதிராக போராட வேண்டிய ஒரு வரலாற்று நிர்ப்பந்தத்திற்கு உட்படுவது தவிர்க்க முடியாதது.

இத்தகைய ஒரு வரலாற்று நிர்ப்பந்தம் இன்று குடாநாட்டில் வசிக்கும் 10 இலட்சம் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்களே! நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? கிழக்குத் தீமோர் மக்களைப்போல கொல்லப்பட அனுமதிக்கப்போகின்றீர்களா? அல்லது பாலஸ்தீன மக்களைப் போல அகதி முகாங்களுக்குள் காலத்தைக் கழிக்கப்போகின்றீர்களா? அல்லது வியட்னாம் மக்களைப்போல — அல்ஜீரிய மக்களைப்போல — போராடி சுதந்திரமாக வாழப் போகின்றீர்களா?

### வீரமும் தியாகமும் எம் பக்கம்

நாங்கள் கிழக்கு தீமோர் மக்களைப்போல -பலஸ்தீன மக்களைப்போல படைபலம் அற்ற ஒருஇனம் அல்லவே! சிங்களப் படைகளை நடுநடுங்க வைக்கும் ஒரு விடுதலைச் சேனையைக் கொண்ட ஒரு இனம் அல்லவா? வீரத்திற்கும் தியாகத்திற்கும் உலகிற்கே உதாரணமாகத் திகழும் உன்னத வீரர்களைக் கொண்ட பெருமைமிகு இனம் எமது தமிழினம். சிங்களப் படைகளின் மூர்க்கத்தனமான படை எடுப்புக்கள் பலவற்றை முறியடித்த வரலாறு எமது விடுதலைச் சேனைக்கு இருக்கின்றது வரையறுக்கப்பட்ட படைபலத்தை வைத்துக் கொண்டே மாபெரும் இராணுவ வெற்றிகளைப் பெறக் கூடிய திறமை மிகுந்த ஒரு தலைவனை எமது இனம் கொண்டிருக்கின்றது. அப்படியெனில் போதியளவு ஆட்பலம் புலிகள் இயக்கத்தில் அதிகரிக்குமானால் எமது இனம் பெறப்போகும் வெற்றிகள் பற்றி சிறிது கற்பனை பண்ணிப்பாருங்கள்.

அன்பிற்குரிய மக்களே!

குடாநாட்டைப் பொறுத்தவரை வாழ்வா? சாவா? என்றொரு நெருக்கடி நிலையே இன்று, எம்முன் உள்ளது. போராடினால் வாழ்வு. பயந்தோடினால் சாவு, என்றதொரு நிலை தான் உள்ளது. இந்த நெருக்கடியில் இருந்து குடாநாட்டை பாதுகாக்கவல்லது புலிகளிடம் உள்ள படைபலம் ஒன்றுதான்.

### படைபலம் வரமாகக் கிடைக்காது

இந்த படைபலத்தை எந்த ஒரு கடவுளும் வரமாகப் புலிகளுக்கு வழங்கமாட்டார்கள். அதேவேளை வானத்தில் இருந்து நிகழும் எந்தவொரு அற்புதமும் சிங்களப்படை எடுப்பில் இருந்து குடாநாட்டு மக்களைப் பாதுகாக்கமாட்டாது. எமது மக்கள்தான் புலிகள் இயக்கத்திற்கான பலத்தை வழங்கும் கடவுளர் ஆவர். மக்களின் ஒரு பகுதியினரான எமது இளம் பரம்பரை புலிகளுடன் இணைவதன் மூலம் தமிழரின் படைபலம் உயரும். அந்தப் படைபல அதிகரிப்புத்தான் போரில் அற்புதங்களை நிகழ்த்தவல்லது.

### குடும்பத்துக்கு ஒருவர் போதும்

''முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையில் இருந்து ''சன்சைன்'' இராணுவ நடவடிக்கை வரை ஏறக்குறைய முப்பதாயிரம் குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளன. ஆனால், எங்களை இடம் பெயர வைத்தவர்களுக்கு எதிராக நாங்கள் என்ன செய்தோம் என்று அந்த முப்பதாயிரம் குடும்ப உறுப்பினர்களும் தங்களுக்குள் கேட்டுப்பார்க்கவேண்டும். இந்தக் குடும்பங்களில் இருந்து வீட்டுக்கு ஒருவர் என்ற வீதத்தில் இயக்கத்தில் இணைவார்களானால் நாம் இழந்த ஊர்களையே திரும்பப் பெறமுடியும். படைஎடுப்பொன்று நடைபெறும் போது அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்தோடுவது தவிர்க்க முடியாததே. ஆனால், அவர்களுடன் எமது இளைஞர்களும், யுவதிகளும் சேர்ந்தோடி இடம்பெயர்ந்தோர் முகாம்களிலோ, அல்லது எங்காவது வீடுகளிலோ தங்கி வாழ்வதால் என்ன பயன் ஏற்படப்போகின்றது. இழந்த ஊர்களை யார் மீட்பது? இடம்பெயர்ந்த மக்கள் எப்போது தங்களது வீடுகளுக்கு மீண்டும் போவது? மேலும், மேலும் எமது ஊர்களுக்குள் எதிரிப் படைகள் புகுவதை தடுப்பது யார்?

### உடன் ஆயுதம் ஏந்துங்கள்

குடாநாட்டின் மடியில் தவழும் இளைஞர்களே, யுவதிகளே, உங்களது அன்னை மண்ணை பாதுகாக்க நீங்கள் அனைவரும் உடனடியாகவே ஆயுதமேந்துங்கள்.

குடாநாட்டின் மூத்த குடிமக்களான பெற்றோர்களே! நீங்கள் வாழ்ந்து அனுபவித்த மண்ணைக்காக்க, உங்களது வீடுகளை, காணிகளை பாதுகாக்க உங்கள் பிள்ளைகளில் ஒருவரையாவது இயக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

எதிரிப்படைகள் பல ஊர்களைப் பிடித்துவிட்டன. இனி எப்படி அதை மீட்பது என்று அவநம்பிக்கைப்படையாதீர்கள். இனிமேல் இயக்கத்தில் சேர்வதால் என்ன பிரயோசனம் என்று விரக்தி கொள்ளாதீர்கள். காலம் இன்னும் கடந்து விடவில்லை. இனியும் தாமதிப்பது ஆபத்து. ஆயிரக்கணக்கில் இளைஞர்கள், இப்போதே இயக்கத்தில் இணைவார்களாக இருந்தால் வெகுவிரைவில் படைவீடுகள் தீப்பற்றி எரியும். இயக்கத்தில் இணைய விரும்பும் இளைஞர், யுவதிகள் அரசியல் துறையினரின் சிற்றூர், வட்ட அலுவலகங்களிலும் மற்றும் முகாம்களிலும் இணைந்து கொள்ளவும்.

எல்லாம் இழந்த பின் போராடுவோம் என்றிருப்பதை விட இருப்பதைப் பாதுகாத்து - சுகமாக வாழ்வதற்காக இப்போதே போராட வாருங்கள் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## புத்தூர், நவக்கிரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதல்களை நடத்தியவாறு முன்னேற முற்பட்ட இராணுவத்தினருக்கு எதிராக நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை விடுதலைப் புலிகள் பாரியளவில் உக்கிர தாக்குதல்களை நடத்தினர்.

விடுதலைப் புலிகள் நடத்திய உக்கிர தாக்குதலில் இராணுவம் பாரிய இழப்புக்களை சந்தித்தது. இராணுவத் தரப்பில் பெரும் உயிரிழப்புகள் ஏற்படுத்தப்பட்டதுடன் இரு டாங்கிகளும் ஒரு பவள் கவச வாகனமும் தாக்கி சேதப்படுத்தப்பட்டன.

"சூரிய பிரகாஷ" என்ற பெயரில் இராணுவத்தினர் ஆரம்பித்து நடத்திய இராணுவ நடவடிக்கையின் 6 ஆம் நாளான நேற்று இப் பாரிய இழப்பை படையினர் சந்தித்தனர்.

நேற்றைய தாக்குதலில் 12 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இதற்கிடையில் புத்தூர்- நவக்கிரி பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் நேற்றுத் தொடர்ந்த "சூரிய பிரகாஷ" இராணுவ நடவடிக்கையில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் 2 அதிகாரிகளும் 16 இராணுவத்தினரும் காயமடைந்தனர் என்றும் இலங்கை வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

அதே சமயம் வடபகுதிகளில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சண்டையில் 9 படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு செயலகம் அறிவித்துள்ளது. (இ-4)

---

## இரத்தம் கோரி அவசர வேண்டுகோள்

யாழ். போதனா வைத்திய சாலையில் காயமுற்று அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும் —

மனிதாபிமான நோக்கில் அன்புக்குரிய மக்கள் அனைவரும் உடனடியாக வருகை தந்து இரத்ததானம் செய்யுமாறும் நோயாளர் நலன்புரி சங்கம் கோரியுள்ளது. (ஒ)

## ஷெல் வீச்சில் ஒருவர் பலி இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 22

நேற்று வலிகாமம் கிழக்கில் இருந்து இராணுவத்தினர் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலை நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

வலி. கிழக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை வரை மக்கள் குடியிருப்புகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதன்போது 25 வயதான வன்னியசிங்கம் சத்தியசீலன், 47 வயதான சின்னத்துரை அன்ரனி, 40 வயதான நாகேஸ்வரி ஆகியோர் கடும் காயங்களுக்கு உட்பட்டனர்.

இவர்களில் வன்னியசிங்கம் சத்தியசீலன் மருத்துவமனையில் உயிரிழந்தார். இவருக்கு திருமணமாகி 6 மாதங்களாகும்.

நேற்றைய ஷெல் வீச்சிலும் மக்கள் குடியிருப்புகள் சேதமாகின. [இ-15-4]

## அறிவியல் கழக நிகழ்வுகள் நடைபெறா

யாழ்ப்பாணம், ஒக். 22

அறிவியல் கழகத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் வாராந்த நிகழ்வுகள் இவ்வாரம் இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் நாள் புதன்கிழமை பி.ப. 4மணிக்கு கழக மண்டபத்தில் உறுப்பினர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நடைபெறவிருப்பதால் அனைவரையும் தவறாது சமுகம்தருமாறு கோரப்பட்டுள்ளது. [இ]

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஒக்.22

வேலணை தொலைக்கல்வி நிலையத்தில் சமூகக்கல்வி, இந்துசமயம், விவசாயம் ஆகிய சிறப்புப் பாடங்களைப் பயிலும் பயிற்சியாசிரியர்கள் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு மேற்படி நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

* * *

கோப்பாய் பிராந்திய தொலைக்கல்வி நிலையத்தில் பயிற்சி பெறும் இறுதியாண்டு பயிற்சி ஆசிரியர்கள் கல்விப் பிரயோக இறுதி மதிப்பீடு நடைபெறும் பாடசாலை, திகதி ஆகியவற்றை சிரேஷ்ட போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-11)

## முதன்மை ஆசிரியர்

யாழ். வலயம் ஒன்று கல்வித் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள முதன்மை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தரம் 2:2, 2:01 வகையைச் சேர்ந்த வலயம் 1 ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும் இது சம்பந்தமான மேலதிக விபரங்களை கோட்டக் கல்விப் பணிமனைகளில் பார்வையிடலாம். என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்க் குதங்கள் மீதான அதிரடி; அரசுக்கு பெரும் சோதனைக்கு ஆரம்பம்!

யாழ்ப்பாண நகர் மீதான இறுதித் தாக்குதலுக்குத் தயாராக நிற்கும் ஸ்ரீலங்கா அரசு —

கொழும்பின் பாதுகாப்பும், எரிபொருள் விநியோகமும் மீண்டும் சாதாரண நிலைக்குத் திரும்பும் வரை —

மீள் ஆலோசனை செய்ய வேண்டிய நிலையில் உள்ளது —

இந்நிலை விடுதலைப் புலிகளுக்கு தற்காலிக இடைவெளி ஒன்றைக் கொடுத்து விட்டதாகத் தோன்றுகிறது —

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் ஏ. எவ் பி. செய்தியாளர் அமல் ஜெயசிங்கா.

ஆனால் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த ரூபவாஹினி மூலம் நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் —

எதுவரினும் இராணுவ நடவடிக்கையை நிறுத்த மாட்டோம் — என்று இறுமாப்புடன் அறிவித்து இருக்கிறார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை அதிகாலை கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் களஞ்சியங்கள் மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் —

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவம் அடைந்து வரும் வெற்றியைத் திசை திருப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே — என்று அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அதாவது எந்த இடைஞ்சல், இடையூறுகளின் மத்தியிலும்போரை நிறுத்துவதற்கு அரசாங்கம் தயாரில்லை என்பதனைக் கோடி காட்டியுள்ளார்.

போர் வடக்கு - கிழக்கில் மட்டும் அன்றி தெற்கிலும் பரவியுள்ளது என்பதனையே வெள்ளிக்கிழமை கொழும்பில் நடந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஸ்ரீலங்காவின் தலைநகர் சமர் நடந்திருக்கிறது.

கொழும்பிலும் அதன் புறநகரப் பகுதிகளிலும் முழத்துக்கு முழம் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டுள்ள, ஆயுதப் படைகள் மிக இறுக்கமாக பின்னப்பட்டிருக்கும் நிலையிலும்—

படையினருக்கு எதிராக நின்று சமரிடும் அளவுக்கு நிலைமை உருவாகி இருக்கி

பரவாது என்பது என்ன நிச்சயம்?

## புதிய பரிமாணம்

வடக்கு - கிழக்குக்கு மட்டுமே போரை மட்டுப்படுத்தி தமிழ் மக்களை அநியாயமாக அழித்தொழிக்கும் அரசுக்கு —

அந்தப் போருக்கு ஆதரவளித்த தமிழர்களின் வாழ்க்கையைச் சிதைத்து விடத்

டிஷ் தூதுவர் ஜோன் பீல்ட் கூறியிருப்பதில் இருந்து —

வடக்கு - கிழக்கில் நடைபெறும் போர் தெற்கில் எத்தகைய பாதகமானவிளைவை (Counter Productive) தோற்றுவிக்கும் என்பதனை அவர்கள் மதிப்பிட்டிருந்தார்கள் என்பது தெரிகிறது.

## உணர முடியவில்லை

ஆனால் —

கொலன்னாவ, ஊறுகொட எண்ணெய்க் குதங்களில் நடந்த அதிரடித்தாக்குதலை நடத்தக்கூடிய சக்தி விடுதலைப் புலிகளுக்கே உண்டு என்பதனை கண்டறியக்கூடிய அனுபவத்தினால் —

பொருண்மிய இலக்குகள் மீதான தாக்குதல் தரக்கூடிய பாதகமான விளைவுகளை உணரமுடியவில்லை.

நேற்று முன்தினம் ரூபவாஹினியில் அவர் ஆற்றிய உரை —

அதிரடித் தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களை, பாதிப்புகளை மறைப்பதி

## திசை திருப்பும் செயலாகப் பார்த்தால் பாதக விளைவுகளையே கொடுக்கும்

கொழும்பில் அரசாங்கம் பாதுகாப்பை எந்தளவுக்குப் பலப்படுத்தினாலும்—

பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்ற தோரணையில் அங்கு வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்புப் படையினர் தொல்லைகளைக் கொடுத்து சித்திரவதை செய்தாலும்—

அரசின் பாதுகாப்பு வலயத்தை ஊடறுத்துச் சென்று இத்தகைய ஓர் அதிரடித் தாக்குதலை நடத்த முடியும்— என்பதனை எண்ணெய்க் குதச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது!

அதனைவிட எவருக்கும் வியப்பைத் தரக் கூடியது, எண்ணெய்க் குதத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் ஆயுதப் படையினரை எதிர்த்து நடத்திய பெரும் துப்பாக்கிச் சமராகும்.

### பாதுகாப்பில் பலவீனம்

கொலன்னாவ எண்ணெய்க் குதம் மீது தாக்குதல் நடத்தி விட்டுத் திரும்பிவரும் போதே பாதுகாப்புப் படையினருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் இந்தத் துப்பாக்கிச் சமர் நடந்தது என்றால் அரசின் பாதுகாப்பு இயந்திரம் எவ்வளவு பலவீனமானது என்பதனை எவரும் மதிப்பிட்டுக் கொள்ளலாம்

வடக்கில் அரச படைகளின் இராணுவ வெற்றியைத் திசை திருப்புவதற்கான நடவடிக்கை என்று கொலன்னாவ, ஊறுகொடவத்த தாக்குதல்களை வர்ணிக்கும் பாதுகாப்பு அமைச்சர்—

**சதுரங்கம்**

அது அரசாங்கத்துக்கு, பாதுகாப்புப் படைகளுக்கு விடப்பட்ட சவால். உண்டான பெருந்தோல்வி என்பதனை— உணர மறந்து விட்டார்.

போரை வடக்கு-கிழக்கிற்குள் மட்டும் மடக்கி வைத்திருக்கலாம் என்ற அரசின் திட்டம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. இது கொழும்பில் மட்டுமன்றி தெற்கின் ஏனைய பகுதிகளுக்கும், வேறு வடிவங்களில் தூண்டுதல் அளிக்கும் தீய சக்திகளுக்கு —

போர் தெற்கேயும் பரவினால்தான் அதன் விளைவுகள் தெரியும் என்ற அளவுக்கு நிலைமை வெள்ளிக்கிழமையுடன் மாற்றம் கண்டுள்ளது. வடக்கு - கிழக்குப் போரில் இது ஒரு புதிய பரிமாணம்.

இதனை உணராதவராகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திசைதிருப்புதல் குறித்துப் பேசுவது அவரது ஒரே திசைப்பட்ட பார்வையையே காட்டுகிறது.

இப்படி ஒரு நிலைமை உருவாகும் என்பதனை அவர் எதிர்பார்த்திருக்கவில்லைப் போலும்! ஆனால் கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் இதனை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

வடக்கில் இராணுவ நடவடிக்கை தீவிரமானால் தெற்கில் இத்தகைய தாக்குதல்கள் நடைபெறலாம் என்று நாம் எண்ணியிருந்தோம் பொருண்மிய இலக்குக் குறி வைக்கப் பட்டுள்ளது — என்று பிரிட்

**- சாணன் -**

லும் —

பாதுகாப்புப் படையினரின் பலவீனத்தை மறைத்து, அவர்களின் செயற்பாட்டை மெச்சும் விதத்திலும் —

எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு எதுவும் உண்டாகாது என்ற தோற்றத்தைக் கொடுக்கும் விதத்திலுமே அமைந்திருந்தது.

வடக்கு-கிழக்கில் நடக்கும் போர் நடவடிக்கைகள் சம்பந்தமாக பொய்களை அல்லது தவறான தகவல்களை

[7ஆம் பக்கம் பார்க்க]

---

பொன்விழா நாளை கொண்டாடப்படுகிறது

# உலகின் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப ஐக்கிய நாடுகள் சபையிலும் மாற்றம் தேவை

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் 50ஆவது ஆண்டு பொன்விழா நாளை ஒக்ரோபர் 23ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

ஐ. நா. சபைக்கு முன்னர் லீக் ஒப் நேஷன்ஸ் என்ற நாடுகளின் கூட்டணி இந்தப் பணியை ஆற்றியது.

1945ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோவில் ஐ. நா. சபை 110 நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார சமூக சபை, நம்பிக்கையுரித்துச் சபை, சர்வதேச நீதிமன்றம் ஆகியன ஐ நா. சபையின் முக்கிய நிறுவனங்கள் ஆகும்.

இவற்றில் பாதுகாப்பு சபையே மிகவும் முக்கியமானது. நாடுகளுக்கிடையே ஏற்படும் பிணக்குகளையும் ஆக்கிரமிப்புகளையும் சமாதானமாகத் தீர்க்கும் பணியில் பாதுகாப்பு சபை ஈடுபடுகின்றது.

ஐ நா. பொதுசபை பிரச்சினைகளை விவாதித்து சிபார்சுகளைச் செய்யும் அதிகாரம் உடையது. ஆனால் பாதுகாப்புசபை ஏற்கனவே கையாளும் விஷயங்களில் பொது சபை தலையிட முடியாது

கடந்த 50 ஆண்டுகளில் ஐ. நா. பொதுசபையினதும் பாதுகாப்புச் சபையினதும் கூட்டங்கள் கொந்தளிப்பானவையாக அமைந்தன பலம் வாய்ந்த நாடுகள் 'வீற்றோ' என்ற ரத்து அதிகாரத்தை அடிக்கடி பயன்படுத்தியமை உலக நாடுகள் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

**செய்தியின் பின்னணியில்**

### ஐ. நா பொலிஸ் படை

1956 ஆம் ஆண்டின் முதன் முதலாக சில அங்க நாடுகளின் துருப்புகளைக் கொண்டு "உள் பொலிஸ் படை" ஒன்றும் ஐ நாவால் உருவாக்கப்பட்டது. அப்பொழுது இஸ்ரேல், எகிப்து படைகளை விலக்க பிரிட்டனும் பிரான்சும் ஐ. நா. என்ற பெயரில் தலையீடு செய்தன. இதே போன்று ஐ. நா. படைகள் இதற்குப்பின் உலகின் பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம் (யூனெஸ்கோ) உணவு விவசாய ஸ்தாபனம் (எம் ஏ ஓ), சர்வதேச தொழிற்சங்க சம்மேளனம் முதலிய பல்துறை சார்ந்த சிறப்பு நிறுவனங்கள் மூலம் ஐ. நா. உலகெங்கும் பணியாற்றுகிறது.

### ரத்து அதிகாரம்

இரண்டாம்உலகயுத்தத்தில் வெற்றி கண்ட நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருந்து வருகின்றன. இந்த நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ரத்து அதிகாரம் இருக்கின்றது.

சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைந்து அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நடந்து வந்த "பனிப்போர்" முடிவுற்ற நிலையிலும் இந்த "வீற்றோ" நிலைத்து நிற்க வேண்டுமா என்று பல நாடுகள் கேள்வி எழுப்பியுள்ளன

### சுவீடன் பிரதமர் ஆலோசனை

சுவீடன் பிரதமர் பாதுகாப்பு சபையின் இன்று இருக்கும் நிரந்தர அங்கத்தவ நாடுகளும் 'வீற்றோ' [illegible] இருக்க வேண்டும் எனவும்,— இன்னும் [illegible] நாடுகளை "வீற்றோ" அதிகாரம் இல்லாது நிரந்தர அங்கத்துவ நாடுகளாக நியமிக்க வேண்டும் எனவும்—,

அந்த ஐந்து அங்கத்துவ நாடுகளாக இந்தியா, யப்பான், ஜேர்மனி, நைஜீரியா, பிரேசில் போன்ற முன்னணி நாடுகளை நியமிக்க வேண்டும் எனவும்— முன்மொழிவு செய்துள்ளார்

மற்றும் அநேகமான நாடுகள் நிரந்தர அங்கத்துவம் என்ற சொல் நீக்கப்பட வேண்டும் எனவும்—

"வீற்றோ" அதிகாரம் எந்த நாட்டுக்கும் இருக்கக் கூடாது எனவும் கூறியுள்ளன.

ஐ. நா.சபை தனது ஆரம்ப ஆண்டுகளில் அமெரிக்காவின் விருப்பத்துக்கு இணையவே பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்தது என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்

சோஷலிச சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்த நிலைமை மேலும் வலுப்பெற்றுள்ளது என்றே கூறவேண்டும்.

பொஸ்னியா ஹேர்ஷிகோவினா, செசினியா, முதலிய யுத்தப் பிரதேசங்களிலும், ருவண்டா, சூடான் முதலிய உள்நாட்டு யுத்தப் பிரதேசங்களிலும் ஐ நாவின் தலையீடு எதனையும் பெரிதாகச் சாதித்து விடவில்லை என்று கூறிவிட முடியாது

**தொகுப்பு: புதினன்-**

### பொருளாதார முற்றுகை

ஆனால் ஈராக், லிபியா போன்ற நாடுகளுக்கு எதிரான ஐ நா. பொருளாதார முற்றுகை, எதிர்பார்க்கப்பட்டதைப் பார்க்கப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்று ஊகிக்க இடமிருக்கிறது.

ஐ. நா. ஸ்தாபனம் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்ற செய்திகளும் வந்த வண்ணம் உள்ளன. இதனாலும் எதிர்காலத்தில் ஐ நா. சபையின் நடவடிக்கைகள் மந்தமாகும் சாத்தியப்பாடு இருக்கிறது.

எப்படி இருப்பினும் உலகத்தில் ஏற்பட்டுள்ள வரலாற்று மாற்றங்களுக்கு ஏற்ப ஐ. நா. அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படுவது அத்தியாவசியமாகின்றது.

உலகின் நான்கு திசைகளையும் சேர்ந்த மக்களுக்குப் பொதுவான அவர்களின் நலன்களில் அக்கறையுடன் உழைக்கக் கூடியதான சார்பற்ற, செல்வாக்குக்கு உட்படாத செயல் திறன் கொண்ட ஒரு துடிப்புள்ள அமைப்பாக மாற வேண்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Robin ஜெனரேற்றர் புத்தம் புதியது. 1,500 Watts Model 2001. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S. கண்ணன், சுடரொளி வரசிகசாலையடி, டச்சு வீதி, மீசாலை வடக்கு.
(39062)

நல்ல இன ஆட்டுக்கடா 10 மாதம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. A. Raj, 52/1, கொழும்புத்துறை றோட், சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39082)

8-10 H. P. 2400 RPM, Yanmar டீசல் இயந்திரம், Welding Transformer நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிறிகரன், ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (நிருநியூசன் சென்ரர் முன்பாக) (39084)

பொமரேனியன் நாய்க்குட்டிகளும், அத்துடன் ஒரு வயது நிரம்பிய கறுப்பு/வெள்ளை ஆண் பொமரேனியன் நாய்களும் விற்பனைக்குண்டு. சி. சிவா, இல 22, செம்மணி வீதி, நல்லூர். (கிட்டு பூங்காவிற்கு அருகில்)
(39087)

புதுச்செம்மணி வீதியில் ஒரு வீட்டின் இரண்டு அறைகளுடன் சேர்ந்த முக்கால் பரப்பு காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கோமதி பரராஜசிங்கம், இல. 172, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(39037)

3 வயது நிரம்பிய அல்சேஷன் பெண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: கி. இராசதுரை எச்சாட்டி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (39093)

புதிய பழைய Mills and Boon நாவல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 151, கோவில் வீதி, நல்லூர்.
(39092)

Iron Safe (அயன் சேவ்), Iron Indoor gate. (இரும்பு உள்கதவு) 7 அடி x 2½ அடி, கடை மேசை, புலித்தோல் (பதனிடப்பட்டது) முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: புதிய இல. 608, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (39097)

தொலைகயாக வைக்கோல் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. கமலநாதன், 21/2, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(39100)

## SALE

Morris Minor 1000 U K. Import One owner for Sale Seen Between9 a m.to 6 p.m no Weekends101/1, Oddumadam Road, Jaffna
(39060)

## தேவை

வேலைத்தளத்தில் தங்கியிருந்து கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. குடும்பத்தோடு தங்கியிருக்கவும் வசதியுண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (39059)

## மணப்பெண் தேவை

சவூதியிலிருந்து வந்துள்ள உடல் குறைபாடுள்ள பிரமச்சாரிக்கு உறவினரின்றி தனிப்பட ஏற்று திருமணப்பதிவு செய்யக்கூடிய அழகிய மணமகள் 37 வயதுக்குள் தேவை. தொழிலுள்ளவர் விரும்பத்தக்கது. ஜாதகம் முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல 979, மே/பா உதயன். (8664)

## விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும், வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் விஜஸ்டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி-2484)

## O/L MATHS

Distinction பெறுபேறடைவதற்கும் ஆரம்பத்திலிருந்து 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் சகல Sectionகளும் portionகளும் நிறைவேற்றப்பட்டு Section & Portion. Rivision உடன் Past - Papers Practice ம் அளிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி.
(39098)

## சோதிடம்

ஜாதகம் கணிக்க கல்வி, தொழில், திருமணம் எதிர்கால பலன் அறிய இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(39048)

## தவறிவிட்டது

வயாவிளான் தெற்கைச் சேர்ந்த மனோரஞ்சிதம் வரமேஸ்வரியின் 446940171 V இலக்க அடையாள அட்டை 19-10-95இல் தாண்டிக்குளம் சோதனை முகாமில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. செல்வராசா கோயிலாக்கண்டி, தச்சந்தோப்பு முகவரியில் சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39091)

15 - 10 - 1995 ஞாயிற்றுக்கிழமை தென் மட்டுவிலிலுள்ள மட்டுவில் அம்மன் கோவில் வீதி - சந்திரகுமார் வீதி சந்திக்கு அருகில் மூக்குக் கண்ணாடி மண்ணிற தோல் உறையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். வ. நவரத்தினம், மே/பா தங்கராசா, வாகையடி, தென் மட்டுவில்.
(39088)

## வணிக புள்ளி விபரவியல்

வெளிவந்து விற்பனையாகின்றன. A/L புதிய பாடத்திட்டத்திற்கு உரியது. ரூபா 250/- யாழ்ப்பாண புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1739)

## பதவி வெற்றிடம்.

பதவி: உணவு மேற்பார்வையாளர்
பால்: பெண்
வயது: 30 — 45
தகைமை: க. பொ. த. (சா. த.)
சம்பளம்: 2000 — 3500 / 20 X 75 பிற படிகளும்

இலவச உணவு தங்கு வசதி உண்டு

அனுபவம்: மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

★ 6 மாத பயிற்சிக்காலம் முடிந்த பின்பே நியமனம் உறுதி செய்யப்படும். (பயிற்சிக் காலத்தில் உணவு, தங்குவசதி உடன் ரூபா 500/- ம் வழங்கப்படும்)
★ விவாகமாகாதவர் அல்லது குடும்பப் பொறுப்பேதுமற்றவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 10 - 1995

அதிபர்,
நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன்-
இழந்தோர் பாடசாலை,
கைதடி.
(சி-2485)

## 30-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 05 — 1912 (சுன்னாகம்)
மறைவு: 23 — 09 — 1995 (இருபாலை)

திருமதி
நாகலிங்கம் சிவக்கொழுந்து

எங்கள் அன்புத்தாயாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்,

மகள்,
மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
காமாட்சி துணை
"ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம"

யாழ். வண்ணை குளங்கரை மருதடி
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
தேவஸ்தானம்

## கேதார கௌரி விரத விழா

அம்பிகை அடியார்களே!
அன்னை ஸ்ரீ காமாட்சி அம்மையின் திருவருளால் 3-10-95 திங்கட்கிழமை பக்திபூர்வமாக ஆரம்பித்த கேதார கௌரிவிரதப் பூர்த்தி விழாவை முன்னிட்டு

23-10-95 திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு

உச்சிக்காலப் பூசையைத் தொடர்ந்து
திரு. ம. ஜெயராம சர்மா
B. A. (Hons)
ஆசிரிய ஆலோசகர்
அவர்கள்

"தாயே அருள் புரி"

என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார்

அடியார்கள் அனைவரும் கலந்து பயன் பெறும் எண்ணம் பணிவுடன் வேண்டுகின்றோம்.
நன்றி.

தர்மகர்த்தா சபை,
நாச்சிமார் கோவில். (39099)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ.

## தொழிற் பயிற்சி வகுப்பு

பாடங்கள்: தையல், மனையியல், கைவினை, கேக் ஐசிங், பூவேலை
இடம்: யா/வை. எம். சி. ஏ. மண்டபம்
காலம்: 01 - 11 - 1995 — 31 - 10 - 1996
நேரம்: பி. ப. 2 - 30

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர் 30-10-1995இற்கு முன் பெயர்களை வை. எம். சி. ஏ. காரியாலயத்தில் பதிவு செய்யவும்.

— செயலாளர்.
(சி-2523)

## யாழ். ஊர்திகள் நிலையம்

1995-09-01ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட "யாழ். ஊர்திகள் நிலையம்" யாழ். மக்களின் எல்லாவகையான வாகனங்களையும் வாகனச் சொந்தக்காரர்களின் நன்மை கருதிக் குறைந்த கட்டணங்களில் சுத்திகரிப்பு செய்ய ஆரம்பித்து உள்ளது. வாகன சுத்திகரிப்பு மட்டுமன்றி வாகன, மிதிவண்டி ரியூப்ஒட்டுதல், வாக்கணேஸ், பொலிசிங் வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

யாழ். ஊர்திகள் நிலையம்,
இல. 50, இளங்கோ வீதி (மணிக்கூட்டு வீதி),
யாழ்ப்பாணம்.
(சி/2468)

## 5-ம் ஆண்டு நினைவலை



மலர்வு: 07 — 06 — 1987
உதிர்வு: 22 — 10 — 1990

சத்தியநாதன் அட்சயன்

ஆண்டு ஐந்து ஆனபோதும் ஆறுதில்லை எம் மனசு அப்பா, அம்மா, அண்ணா என்று அழைத்த ஒலி இன்றும் எம் காதில் ஒலிக்கின்றது.

என்றும் உன் நினைவில் வாழும்,
அம்மா, அப்பா, அண்ணா, தம்பி.

நா. சத்தியநாதன்,
கைதடி தெற்கு,
கைதடி.
(சி-2522)

# பாணுக்கு பதிலாக பனை வெல்லம் கலந்த குரக்கன் றொட்டியை உணவாக்க வேண்டும்

## அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட நிலை குடாநாட்டு மக்களுக்கு இனியும் வேண்டாம்

குடாநாட்டு மக்கள் பாணுக்கு கியூவில் நிற்பதைக் கண்டதும் ஐந்து தசாப்தங்களுக்கு முந்திய யாழ்ப்பாண மக்களின் உணவுப்பழக்கம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது.— மூத்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமான இக்கட்டுரையாளருக்கு...

வடக்கு — கிழக்கு இணைந்த அகண்ட தமிழ் மாநிலத்துத் தமிழ் மக்களது இன்றைய உணவு நிலை மிக மிகச் சிந்திக்கற்பாலது வட, தென் தமிழீழம் அன்று கிழக்கின் நெற்களஞ்சியமாக விளங்கியது அதே நேரத்தில் குறிப்பாக ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சிறு தானியங்களின் களஞ்சியமாக விளங்கிய பெருமை யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குரியது.

குரக்கன், தினை, வரகு, பயறு முதலிய சிறுதானியங்களை விளைவிப்பதில் அன்றைய யாழ்ப்பாண விவசாயி ஒவ்வொருவனும் அக்கறை காட்டினான் பல ஆயிரக் கணக்கான. புசல் சிறுதானியங்கள் அன்று விளைவிக்கப்பட்டன. அன்றைய யாழ்ப்பாணத்துக் கிராமவாசிகள் தமது தினசரி மூன்றுவேளை உணவிலும் இச்சிறுதானிய வகைகளுக்கும் கிழங்கு வகைகளுக்கும் முக்கிய இடமளித்தார்கள் இதனால் பல தலைமுறைகளாக அவர்கள் பிறரது தயவை எதிர் பார்க்காமல் தன்மானமுள்ள வாழ்க்கையும் மேற்கொள்ள முடிந்தது

குரக்கன், தினை, பயறு, வரகு முதலிய சிறுதானிய வகைகளுடன் ஒடியலையும், மரவள்ளிக்கிழங்கையும் அபரிமிதமாகத் தமது உணவில் சேர்த்து மிகமிக ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்தவர்களும் யாழ்ப்பாணத்துக் கிராம மக்களேயாவர். இத்தகைய மக்களது வாழ்வைச் சீரழித்த சிறப்பில் அரசாங்க மானியத்துடன் வழங்கப்பட்ட அம்மாப்பச்சை அரிசிக்கும் அமெரிக்கன் கோதுமை மாவுக்கும் பெரும் பங்குண்டு.

> மக்களது வாழ்வைச் சீரழித்த சிறப்பில் அரசாங்க மானியத்துடன் வழங்கப்பட்ட அம்மாப்பச்சை அரிசிக்கும் அமெரிக்கன் கோதுமை மாவுக்கும் பெரும் பங்குண்டு.

**தாக்கங்கள்**

குறைந்த விலையிலோ அல்லது இலவசமாகவோ அரசாங்கம் அரிசியையும் மாவையும் வழங்க ஆரம்பித்த காலம் தொட்டு யாழ்ப்பாணக் கமக்காரர்களது வாழ்விலும் பல தாக்கங்கள் ஏற்பட்டன. குரக்கன், தினை, வரகு, பயறு மரவள்ளிக்கிழங்கைத் தமது உணவாகக் கொண்ட மக்கள் கூட்டம் பாமியப் பச்சை அரிசிச் சோற்றை உணவாகக் கொள்ள ஆரம்பித்தது.

இதற்குக் காரணங்கள் பல கடும் சரீர உழைப்பின்றி தமக்கு வேண்டிய உணவின் கணிசமான பகுதியை அரிசியாகவும், கோதுமை மாவாகவும் இலகுவாகவும் மலிவாகவும் மக்கள் பெறக் கூடியதாக இருந்தமை ஓர் காரணம்.

இந்நிலை மேலோங்கிய பொழுது குரக்கன், தினை, வரகு. பயறு போன்ற சிறுதானிய வகைகளுக்குச் சந்தையில் மதிப்பும் விலையும் அறவே இல்லாமற் போனமை இரண்டாவது காரணம். இத்தானியங்களை விளைவித்த கமக்காரனுக்குத் தொடர்ந்து வருடா வருடம் கமச்செய்கையில் பாரிய நட்டமேற்படத் தொடங்கியமை மூன்றாவது காரணம். மக்கள் தமது பாரம்பரியமான உணவு முறைகளைக் கைவிடத் தொடங்கியமை நான்காவது காரணம். இது அவர்கள் பிழையன்று. அரசின் பிழை

**அரசனை நம்பி புருசனை......**

ஓர் காலத்தில் மோராதாரத்தையன்றித் தேநீராதாரத்தை அறியாத யாழ்ப்பாணக் கிராம மக்களை இலங்கைத் தேயிலைப் பிரசார சபையினால் இல்லங்கள் தோறும் சென்று வழங்கப்பட்ட இலவச தேநீர்ப் பானம் சீரழித்த கதை தெரிந்ததே. அது போன்றே இலங்கை சுதந்திரம் அடைந்தபின் மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் மக்களை மாக்களாகப் பாவித்து வாக்கு வேட்டையாடிப் பதவியிலமர்த்துவதற்காக அறிமுகப்படுத்திய இலவச அல்லது மானிய விலையில் வழங்கிய உணவுப் பொருள்கள் அனைத்தும் யாழ்ப்பாண மக்களை அடிமைப்படுத்திப் பாழ்ப்படுத்திவிட்டன.

> அன்றைய யாழ்ப்பாணத்துக் கிராம வாசிகள் தமது தினசரி மூன்று வேளை ஆகாரத்திலும் சிறுதானிய வகைகளுக்கும் கிழங்கு வகைகளுக்கும் முக்கிய இடமளித்தார்கள் இதனால் பல தலை முறைகளாக அவர்கள் பிறரது தயவை எதிர்பார்க்காமல் தன்மானமுள்ள வாழ்க்கையை மேற்கொள்ள முடிந்தது.

தன்னையே தனக்குதவி என்று வாழ்ந்த மக்கள் பிறரையே தமக்குதவி என்ற நிலைக்குள் தள்ளப்பட்டமையே இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணமாக அமைந்துவிட்டது. அரசனை நம்பி புத்திசாலியான புருசனைக் கைவிட்டவளின் நிலையில் இன்று யாழ்ப்பாண மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். சொந்த மனைவியாம் குரக்கனை மறந்து மாவைத் தஞ்சமடைந்தவர்கள் இன்று அதுவுமின்றி இதுவுமின்றி வாழ்வா இது பட்டினிச் சாவல்லவா என்கிறார்கள்.

உணவுக் கப்பல்களை எதிர்பார்க்காமல் வாழ்ந்த அன்றைய யாழ்ப்பாணக் கிராம மக்களது வாழ்வு மீண்டும் பழையபடி மலர வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இன்றைய காலகட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு உற்பத்தி முறையில் பாராட்டுக்குரியவை வன்னிப் பகுதி மக்கள் தமது உற்பத்தியான அரிசியைத் தமது மூன்று வேளையும் உணவாக்கக்கூடு

[6 ஆம் பக்கம் பார்க்க]

— செல்லப்பா நடராசா —

# தமிழ் தவழ்ந்து விளையாடிய பல்கலை வேந்தன் செல்வராசன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (15 - 10 - 95) அன்று கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களின் இல்லத்தில் யாழ். இலக்கிய வட்டத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று நடந்தது. அங்கே தான் எனக்கு அந்தத் துயரச் செய்தி கிடைத்தது.

''பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராசன் மறைந்து விட்டார்!''

என் நெஞ்சிலே யாரோ அடித்தது போல இருந்தது. அருமையான நண்பர் அவர்.

அற்புதமான கவிஞர். சொல்லின் செல்வர்.

இலக்கியத் தொடர்பு காரணமாக வாலிப வயதிலிருந்தே அவரோடு எனக்குப் பழக்கம் ஏற்பட்டது.

நட்பாடலில் அவர் தனிச் சுவை கண்டவர்.

அந்தக் காலத்தில் சில்லாலையில் நடந்த அவருடைய முதல் திருமண விழாவுக்கு நானும் எனது மனைவியும் போயிருந்தோம். திருமணப்பரிசாக ஒரு 'இசைப் பெட்டி''யும் கொடுத்தோம். அந்த இசைப்பெட்டி —

அது நடந்து சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து — இன்றிலிருந்து ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் — நான் கொழும்புக்குப் போயிருந்தேன். அங்கே எழுத்தாள நண்பர் திரு. சோமகாந்தன் (ஈழத்துச் சோமு) அவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன்.

நான் வந்திருப்பதை அறிந்த இலங்கை வானொலிக்காரர்கள் ஒரு நேர் காணல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சோமகாந்தனைப் பிடித்துக் கொண்டார்கள். நான் சற்றே பின்னடித்தேன். பேச்சுக் கலைக்கும் எனக்கும் சற்றே தூரம்.

அதனால் யாராவது என்னை நன்கு அறிந்த ஒருவர் என்னிடம் வினாக்களைத் தொடுத்தாலன்றி என்னிடமிருந்து சரியான விவரங்களை எடுக்கமுடியாதென்பது எனக்குத் தெரியும். எனவே சில்லையூர் செல்வராசன் என்னைப் பேட்டி காண்பதென்றால் சரி' என்றேன்

எல்லா ஒழுங்குகளையும் செய்த பின்னர் சில்லையூரோடு நான் வானொலி நிலையம் சென்றேன். ஆனால் ஏதோ நிர்வாக ஒழுங்குகள் காரணமாக வேறு ஒரு பெண்மணியே என்னைப் பேட்டி கண்டார். அவரோடு எனக்கு அதிக பழக்கம் இல்லாத போதும், என்னைப் பற்றிய விபரங்களையெல்லாம் கேட்டு அந்த நேர்காணலைத் திருப்திகரமாக நிறைவேற்றினார். சில்லையூர் செல்வராசன் அவருக்கு வேண்டிய விபரங்களைக் கொடுத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்குப்பற்று என்னைத் தமது வீட்டுக்கு வரும்படி செல்வராசன் அழைத்தார். செல்வராசனின் கவித்துவம் மட்டுமல்ல, அவருடைய இனிய சுபாவமும் எனக்கு மிகவும் பிடித்தது நான் அவரிலும்பார்க்க எட்டு வயது மூத்தவன் என்னிடம் அவருக்கு மிகுந்த மதிப்பும் விருப்பும் உண்டு. [illegible] போய் நேரம் போனது தெரியாமல் சுமார் மூன்று மணி நேரத்துக்குமேல் களைத்துக் கொண்டிருந்தேன்.



சில்லையூர் செல்வராசன்

> நாடறிந்த கவிஞரும் கலைஞரும் ,பல்கலை வேந்தனுமாகிய சில்லையூர் செல்வராசன் அண்மையில் காலமானார்.
>
> கவிதையிலும் சரி, தான் சிறந்து விளங்கிய ஏனைய துறைகளிலும் சரி தனக்கென ஒரு தனிப்பாணியையும், தனித்துவத்தையும் வகுத்துக் கொண்டவர் சில்லையூர்.
>
> அவரைப் பற்றி மூத்த எழுத்தாளர் வரதர் வரைந்த நினைவுக் குறிப்பு ஒன்றை இங்கே தருகிறோம்.
>
> ஓர் இலக்கிய கர்த்தாவைப் பற்றி இன்னோர் எழுத்தாளன் சொல்வது சுவைபடு இலக்கியமல்லவா?

சுவையாக உரையாடுவதில் சில்லையூர் வல்லவர். இலக்கிய உலகைச் சுற்றிவந்தோம். கவிதையைப் பற்றிப் பேச்சு வந்தது புதிய கவிஞர்களைப் பற்றி குறிப்பிட்ட போது ''புதுவை இரத்தினதுரை என்பவர் மிகச்சிறப்பாக எழுதுகிறார்'' என்று நான் சொன்னேன் ''புதுவையா! அவன் என்னுடைய பண்ணைதானே!'' என்று செல்வராசன் பெருமிதத்தோடு சொன்னது நினைவிலிருக்கிறது.

(அப்போது புதுவையின் பெயர் இன்றளவு பெயர் பெற்றிருக்கவில்லை.)

நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது ஒரு பெண்ணும், ஆறேழு வயதுச் சிறுவனும் அங்கே வந்தார்கள்.

அவர்களைச் சில்லையூர் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

(''இது கமலினி தெரியுந்தானே'' —இது எங்கள் மகன் பெயர் சொன்னார் நினைவில்லை.)

பிறகு அந்தப்பையனை தமதருகே அணைத்து அவன் காதுக்குள் ஏதோ சொன்னார்.

உடனே அந்தச் சிறுவன் என்னருகே வந்து என் காலருகே நிலத்தில் படுத்து வணங்கினான்.

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனேன். எனினும் பையனைத் தூக்கி அணைத்து வாழ்த்துச் சொல்லிவிட்டு சில்லையூரிடம் ''இதென்ன இது? இப்படிக் காலிலே விழுகிற'' பழக்கமெல்லாம் தேவைதானா?என்றேன்.

''இல்லை வரதர் பிள்ளைகள் சிறு வயதிலேயே பெரியவர்களை மதிக்கவும், மரியாதை செய்யவும் பழக வேண்டும்...... உங்களுடைய ஆசீர்வாதம் இவனுக்கு வேண்டும் என்று என் மனம் விரும்பிற்று'' என்றார் செல்வராசன்.

அதை நான் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், செல்வராசனின் பண்பாட்டையும் அவர் என் மீது வைத்திருந்த மதிப்பையும் அறிந்து நெஞ்சு நிறைந்தேன்.

இந்தச் சமயத்தில் செல்வராசன், கமலினியிடம் ஏதோ சொன்னார் கமலினி உள்ளே போய் ஒரு சிறு பெட்டியுடன் திரும்பி வந்தார்.

செல்வராசன் அதை வாங்கி அதன் அடிப்பாகத்தில் கையை வைத்து 'கீ' செய்துவிட்டுப் பெட்டியைத் திறந்தார். உடனே பெட்டிக்குள்ளிருந்து ஒரு இனிய இசை எழுந்தது.

''நினைவிருக்கிறதா?'' என்று செல்வராசன் என்னிடம் கேட்டார்.

எனக்கு நினைவு வந்துவிட்டது! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நான் அவருக்குக் கொடுத்த திருமணப்பரிசு அது.

நண்பர் செல்வராசனைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்ல என்னிடம் விடயங்கள் இருக்கும் அலைகளை மறதி சாப்பிட்டுவிட்டது!

எப்படியிருந்தபோதிலும். அந்தப் பல்கலை வேந்தரின் இனிய நட்பாடலும் அவரது நாவில் தமிழ் தவழ்ந்து விளையாடிய அற்புதமும்... அவைகள் ஒருபோதும் மறக்கப்படமாட்டா!

★

— வரதர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIPLOMA IN PHARMARCOLOGY
(ENGLISH MEDICINE)

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 28 - 10 - 1995**

Lecture by:

**Dr. V. P. Sundararajan**

குறிப்பு: சுதேச, மேற்கத்திய (ஜேர்மனி) வைத்தியர்களுக்கும் வைத்திய மாணவர்களுககும மாத்திரம்.

## சாயி மருத்துவ கல்லூரி

இல: 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2442)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.
## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 20-11-1995 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் - தாவரவியல் / இரசாயனவியல் / பௌதிகவியல் / விலங்கியல் / கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளி விவரவியலும்.

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு.
(மேலதிக விவரங்கள் 19 10-1995 ஆம் திகதி வெளியான உள்ளூர்ப் பத்திரிகைகளில்)

2. உதைபந்தாட்டம் / துடுப்பாட்டம் / வலைகோற்பந்தாட்டம் பெண்கள் / மேசைவரிப்பந்தாட்டம் / பூப்பந்தாட்டம் / மெய்வல்லுநர் பயிற்சிகள் / உடற்பயிற்சி விளையாட்டுகள் / சதுரங்கம் / கராட்டி / வரிப்பந்தாட்டத்தில் இடைவரவுப் போதனாசிரியர்.

கொடுப்பனவு விகிதம்

மணித்தியாலயம் ஒன்றிற்கு 75/- ரூபா.
(மாதமொன்றுக்கு 900/- ரூபா உச்ச வரம்பிற்கு உட்பட்டு)

தகைமைகள்:

1. தேசிய அணியொன்றையோ, மாவட்ட அணியொன்றையோ, தேசியப் பாடசாலை அணியொன்றையோ, இணைந்த பாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப் படுத்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

2. மாவட்ட அணியையோ, மாவட்ட இணைந்த அணியையோ மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்குப் பயிற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

3. விளையாட்டுத் துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பயிற்றுநராகக் குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4. பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுக்களைப் பயிற்றுதலில் அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

5. பாடசாலையொன்றில் அல்லது கழகமொன்றில் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றில் வீரமுதல்வரை அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றவரை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக்கிளையில் சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையொன்றை 23 x 10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட 2/- ரூபா முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

**பதிவாளர்,**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
12 - 10 - 1995

(சி-2525)


## பாணுக்குப் பதிலாக....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளலாம். அதில் தவறில்லை.

ஆனால் யாழ்ப்பாணம் மக்களது உணவு நடைமுறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. கொழும்பிலிருந்து மாக் கப்பல் இதோ வந்துவிடும் என்று அடுப்பைப்பற்ற வைத்து விட்டுப் பெண்கள் காத்திருக்கும் இன்றைய அவலநிலை மாற வேண்டும். இதற்குரிய வழிவகைகள் என்ன?

யாழ்ப்பாண மக்களது வாழ்வில் அரிசிக்கு அடுத்தபடியாகக் குரக்கன் முதலான உணவுப் பண்டங்கள் முக்கிய இடத்தை வகிக்க வேண்டும். குரக்கன் உணவு, அரிசியிலும் பார்க்கப் பல மடங்கு மிகமிக ஆரோக்கியமான சத்துணவாகும். ஒரு வேளை குரக்கன் உணவு இரு வேளை மா உணவிலும் பல மடங்கு மேலானது; நிறைவானது! பசியை அறவே போக்கக் கூடியது.

அந்தக் காலத்துத் தாய்மார்கள் சமத்தில் துளாமிதிக்கும் தமது இளவல்களுக்கு முட்டுக்காய்ப் பதத்தில் கொய்த குரக்கன் மா கொண்டு நீற்றுப் பெட்டியில் அவித்தபிட்டை ஓர் தனிப் பாத்திரத்தில் கொட்டி சுடு பிட்டின் மேல் முழையில் எள்ளெண்ணெயை ஊற்றி இதமாக உண்ணக் கொடுப்பது வழக்கம்.

### தவறான கணிப்பு

இன்றைய தலைமுறையினர் குரக்கன் மாப் பண்டங்கள் சுவையற்றவை என்று கருதுவார்களாயின் அது தவறான ஓர் கணிப்பாகும். குரக்கன் சுவைக்காக மட்டும் உண்ணப்படும் ஓர் தானியமல்ல அது சுகத்திற்காகவும் உணவாகப் படும் ஓர் தானியமாகும்.

வட தமிழீழத்தில் பனை வெல்லம் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. பனை வெல்லம் கலந்து தயாரிக்கப்படும் குரக்கன் றொட்டியை எவருமே விரும்பிச் சுவைத்து அனுபவிக்க முடியும். கித்துள் வெல்லம் கொண்டு தயாரிக்கப்படும் இத்தகைய குரக்கன் மாப் பண்டங்கள் தென்னிலங்கையில் மிகமிகப் பிரசித்தமானவை.

குரக்கன் களி குழந்தைகள் கூட விரும்பி உண்ணக் கூடிய ஓர் உணவாகும் பவித்தமான காய்கறிகள் சேர்த்துத் தயாரிக்கப்படும் குரக்கன் கூழ் மிகமிகச் சுவையான சிறந்த வோர் சத்துணவாகும். கீரை கலந்து அவித்த குரக்கன் பிட்டுக்கும் வெந்தயக் குழப்புக்கும் அல்லது முருங்கைக்காய்க் கறிக்கும் நிகர் வேறெதுவும் இல்லை கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையும் நிலையிலேயே இன்று நாம் உணவுக்காகக் கலங்குகிறோம்

கோதுமை மாத் தோசையிலும் பார்க்கப் பத்து மடங்கு சுவையானது தினை அரிசித் தோசை என்பதை இன்றைய சந்ததியினர் அறிய மாட்டார்கள். அரிசிப் பாற்பொங்கலுக்கு நிகராக வேறெதையும் கூற முடியாது.

### வரகு

சிறுதானிய வகைகளைப் பற்றி சிந்திக்கையில் வரகு எமது ஞாபகத்திற்கு வராமல் இருக்க முடியாது கார்காலம் தொடங்கவுள்ள இச் சந்தர்ப்பத்தில் விவசாயிகள் வரகு சாகுபடியை பற்றியும் சிந்திக்கக் கடமைப்பட்டவர்கள். சுவையில் நெல்லுக்கு நிகரான வரகு கலட்டுப்பூமிகளிலும் மழையின் துணை கொண்டு நன்கு விளையக் கூடிய ஓர் பயிராகும் களைபிடுங்கல், உரம்போடுதல், பீடை கொல்லிகளைப் பாவித்தலின்றி சுலபமாகச் சாகுபடி செய்யக்கூடிய பயிர் இது. வரகையும் பயிரிட்டுப் பயன் பெற நாம் தவறக்கூடாது [illegible]

சில மாதங்களுக்கு முன்னர் கறிவாழைக்காய் ஒரு கிலோ ஐந்து ரூபாவுக்குத் தானும் குடாநாட்டில் விற்க முடியாத நிலை இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர் ஒருவர் சுவையான தகவலொன்றை பகிமாறினார்.

அந்தக்காலத்தில்தான் சிறு பிள்ளையாக இருந்த நாட்களில், தனது பேத்தியார் கறிவாழைக்காயத்தோல் சீவி, நீளப்பாட்டுக்கு நாலாகப் பிளந்து, பால்விட்டு அவித்துப்பனை வெல்லத்துடன் தமக்கு உண்ணத்தந்ததையெல்லாம் நாம் மிகமிகச் சுவைத்து உண்டு மகிழ்ந்ததாகத் தெரிவித்தார்.

நாம் எமது பாரம்பரிய உணவுகள் பலவற்றை நாகரிகமற்றவை என்று எண்ணி ஒதுக்கித்தள்ளிக் காலையில் பாணை உண்பதே நாகரீகமாந்தரின் இலட்சணம் என்று எண்ணியதன் பலாபலன்களை இன்று அறுவடை செய்து கொண்டிருக்கிறோம்.

*தானியங்களின் அரசன்*

## நல்லூரில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

கொழும்பு ஒக். 22

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு கந்தர்மடம் பகுதி ஜே/102, ஜே/104, ஜே/105 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தோர் தமது பாதுகாப்பு நிதியை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணி முதல் மாலை 5-30 மணி வரை கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலையில் செலுத்தலாம் என்று தேசிய பாதுகாப்பு நிதி, நல்லூர் தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர். (எ)

கொழும்பிலிருந்து உணவுக் கப்பல் வரவில்லை என்றால் பட்டினிச்சாவு வந்துவிடுமோ என்ற நிலை பாணுக்காக கியூ வரிசையில் கால் கடுக்க நிற்கிறோம்.

எமது மண்ணில் விளையக் கூடிய தானியங்களை எமது உணவாக்கி இந்த அடிமை நிலையிலிருந்து நீங்கக் கூடாதா.? ★


## Y. M. C. A. JAFFNA
## TALENT CONTEST-95

**Finals**

DATE :- 23 - 10 - 1995
TIME :- 2-00 p. m
VENUE :- Chundikuli Girls' College Hall

Entrance by programme

(C/2524)



## முக்கிய அறிவித்தல்
### சைவ வித்தியா விருத்திச் சங்கம்
### திருநெல்வேலிச் சிறுவர் இல்லம்

மேற்படி இல்லத்திற் சேர்க்கப்பட்டிருந்த பிள்ளைகள் இடம்பெயர்ந்து வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் (அம்பலவாணர் பாதை பலாலி வீதி, திருநெல்வேலி), வீட்டில் தற்காலிகமாக 18 - 10 - 1995 தொடக்கம் தங்கியிருக்கின்றனர். அவர்களுக்கீழ்க் காணும் பயருடையவர்கள் தங்கள் தாய்மாரை வந்து தங்களை உடனடியாகக் கூட்டிச் செல்லுமாறு வேண்டுகிறார்கள்.

இ. அஜிந்தா (தாய்: இ சிவலக்குமி), ந புவனா. ந சசிகலா (ந கமலக்குமி), ம. தாரிணி, ம வராகினி (ம. கமலாதேவி). த தர்சினி (த. செய்சிராணி). இ விமலாதேவி இ. மைதேவி (இ ஞானம்மா), ம வசந்திமாலா (ம. தவராணி), தி சோபனா, தி தீபனா (தி தவமணி), ஆ மிருணாளினி (ஆ. பொன்னம்மா), சி கௌசிகா (சி. கனகா) ம. ரதி சஞ்சீவினி (தந்தை: மகேந்திரன்) வ. ரஜனி (வ. நிர்மலா), கி கிருஷ்ணராசா. கி சுதர்சன் (கி. வசந்தி), க. மகேந்திரராசா, க. கனகலிங்கம் (க அழகம்மா), ந கிர்தர்சன் (ந. இராஜேஸ்வரி), சி சிவமோகன் (சி. நாகம்மா), தி. கமலேலாசன் (தி நாகேஸ்வரி).

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்,**
தலைவர்.

(சி/2526)



## நன்றி நவிலல்
### திருமதி மனோன்மணி ஜெயராஜா

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடத்தில் வசிக்கும் நான் எனது மனைவியாகிய திருமதி மனோன்மணி ஜெயராஜாவின் (தையல் போதனாசிரியை, பிரதேச செயலகம் வலி-வடக்கு, தெல்லிப்பளை) அகால மரணத்தையொட்டி நாவடியில் நடைபெற்ற மரணச் சடங்கில் 18-10-95 அன்று பங்குபற்றியும் வேண்டிய உதவிகளை செய்தும் மற்றும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் நானும் எனது மகள் கல்யாணியும் (ஆண்டு 6 Yellow, உடுவில் மகளிர் கல்லூரி) எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்து கொள்ளுகிறோம்.

சி. ஜெயராஜா
(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்,
பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)

(8666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நகரில் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்

கொழும்பு, ஒக். 22

படையினரின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக விடுதலைப் புலிகள் கொழும்பில் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

பாதுகாப்பு அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

படையினர் கொழும்பைச் சுற்றிவளைத்து பெரும் தேடுதலை ஆரம்பித்துள்ளனர் என்றும் அந்த அதிகாரி கூறினார்

இதற்கிடையில் கொலன்னாவை, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் மீது தாக்குதல் நடத்திய ஆயுதபாணிகள் குழுவைச் சேர்ந்த ஆறு பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆயுதபாணிகளுடன் சேர்த்து இதுவரை 25 பேர் பலியாகி உள்ளனர் என்றும் 32 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (இ-6)

---

## உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### பணத் தடை!

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு என்னென்ன வழிகளில் நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் கொடுக்க முடியுமோ, அவற்றை எல்லாம் தப்பாது கொடுத்து வருகிறது ஸ்ரீலங்கா அரசாங்கம்.

குடாநாட்டின் மொத்த சனத்தொகையில் சரி அரைவாசி மக்கள் தமது சொந்தக் கிராமங்களை விட்டு, வீடு வாசல்கள், நிலம் புலங்களை இழந்து, நிரந்தர அகதிகளாகி இடம்பெயர்ந்துள்ளனர்.

மிகுதி அரைவாசிப் பேரும் ஷெல் வந்து எப்போது விழும் என்று தெரியாத நிலையில், எந்தக்கணமும் தாங்களும் அகதிகளாக நேரிடுமோ என்ற மன அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்தவர்களுக்கும் சரி, இடம்பெயராதவர்களுக்கும் சரி, உணவுப் பஞ்சம் பொதுவாகவே இருக்கிறது.

பொருளாதாரத் தடை, உணவுத்தடை என்பன குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையை முற்றாகச் சீரழித்துள்ளன.

உடலுழைப்பால் உற்பத்தியைப் பெருக்கி உயர்ந்த யாழ்ப்பாணத்தவரின் உழைப்பும் உற்பத்தியும் வரைவுகளின் கீழ் மட்டப் புள்ளியில் வந்து நிற்கிறது.

குடாநாட்டுக்கு வெளியே வாழும் உறவினர்களுக்கு தமது கஷ்டங்களைத் தெரிவித்து பண உதவி பெறுவதற்கும் தபால் விநியோகத் தடை தடுக்கிறது.

முன்னொரு காலத்தில் வங்கியில் சேமித்து வைத்த பணத்தை மீளப்பெற்று அன்றாடச் சீவியத்தைப் போக்குவதற்குத் தானும் வங்கிகளில் பணம் இல்லை.

யாழ்ப்பாணத்து மக்களின் ஆயிரம் ஆயிரம் கோடி (மில்லியன் கணக்கான) ரூபா பணம் தெற்கில் வங்கிகளின் தேவைக்கும், அவற்றினூடாக அரசாங்கத்தின் செலவுகளுக்கும் பயன்படுத்தப் படுகிறது.

ஆனால் குடாநாட்டிலே வங்கிகளில் (திரவப்) பணம் இல்லை. மக்கள் வைப்பிலிடும் பணம் அதிகமாகச் சேரும் போது இங்கே வைத்திருப்பது பாதுகாப்பில்லை என்று கூறி கொழும்புக்குக் கட்டுக் கட்டாக, கட்டி அனுப்பும் உள்ளூர் வங்கி அதிகாரிகள் எவ்வளவு முயன்றும் கொழும்பிலிருந்து பணத்தைத் தருவிக்க முடியவில்லை.

யாழ்ப்பாணப் பகுதி வங்கிக் கிளைகளுக்குப் பணம் அனுப்பும் அதிகாரம் வங்கித் தலைமையகங்களின் கையை மீறிப் பாதுகாப்பு அமைச்சின் கைக்குப் போய்விட்டது!

பாதுகாப்பு அமைச்சுக்கும் பணத்துக்கும் என்ன தொடர்பு? வங்கியில் வைப்பிலிட்ட பணத்துக்கு உத்தரவாதமும் பாதுகாப்பும் தரும் பொறுப்பு அதனுடையது அல்லவே? வங்கியினுடையது தானே...?

தான் நினைத்த கற்பனைக் காரணங்களைக் காட்டி குடாநாட்டுக்குப் பணம் கொண்டு வருவதனை அது தடுத்து வருகிறது.

தமிழ் மக்களின் அன்றாடத் தேவைகளான உணவு, பணம் மற்றும் பல பாதுகாப்பு அமைச்சின் கைக்குப் போயிருப்பது—

தமிழ் மக்களுக்கு எதிரான போரை அரச சார்பில் முன்னெடுக்கும் பாதுகாப்பு அமைச்சின் கைக்குப் போயிருப்பது—

குடாநாட்டு மக்களின் வாழ்க்கை விவகாரம் கொழும்பின் சிவில் நிர்வாகத்தினிடமிருந்து இராணுவ நிர்வாகத்துக்கு மாறி வருகிறது என்பதனையே எடுத்துக் காட்டுகிறது.

---

### சந்திரிகா அதிர்ச்சி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22

கொலன்னாவை, ஊறுகொடவத்த குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு அதிர்ச்சி தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க்கில் இருந்து நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தார்.

ரூபவாகினி இதனை நேற்று இரவு ஒளிபரப்பியது. (இ)

---

### எண்ணெய்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட பழக்கதோசத்தினாலோ என்னவோ, அவர் உண்மை நிலையை மறைக்க, மழுப்ப முயன்றார்.

முதலீடுகள் வரண்டு போகும்

பொருளியல் துறையில் ஏற்கனவே ஸ்ரீலங்கா படுபாதாளத்தில் வீழ்ந்து சரிந்து கிடக்கிறது பொருளியல் இலக்குகள் மீதான தாக்குதல்கள் மேலும் நிலைமையை மோசமாக்கும்.

இது ஒரு பாடசாலை மாணவனுக்கும் தெரிந்த விடயம். ஸ்ரீலங்காவின் பொருளியலைத்தை ஓரளவுக்கேனும் நிமிர்த்தி எடுப்பதானால் போர் நிறுத்தப்பட வேண்டும்.

நாட்டின் வருமானத்தில் (வெளிநாட்டு உதவிகள் உட்பட) மூன்றில் ஒரு பகுதி ஏற்கனவே போருக்குச் செலவிடப்படுகிறது. பொருளியல் இலக்குகள் தாக்கப்படின் அரசின் நிதி நிலைமை முழு வங்குரோத்தில் முடியும். அப்போது நாடு இயங்க முடியாத ஓர் ஸ்தம்பித நிலை, இக்கட்டான நிலை உருவாகும். பொருளியல் வளர்ச்சிக்கு அரசாங்கம் பெரிதாக நம்பியிருக்கும் வெளிநாட்டு முதலீடுகள் வரண்டு போகும்.

இத்தகைய ஒரு பெரும் பொருளியல் நெருக்கடி உருவாக அனுமதிப்பதா.. —?

அல்லது தமிழர்கள் மீதான போரை நிறுத்தி– இராணுவத் தீர்வைக் கைவிட்டு— பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதா, என்பதனை கொழும்பு அரசாங்கமும், சிங்கள மக்களும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய கட்டம் உருவாக்கப்பட்டுள்ளது!

அதனை உணராது இராணுவ நடவடிக்கையை நிறுத்தமாட்டோம் என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சூளுரைப்பது நாட்டுக்கு நல்லதல்ல.

ஜனாதிபதி சந்திரிகா ஐ. நா. மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்று விட்டார்.

அவர் இங்கிருந்தாலும் மாமன் அனுருத்தவின் நிலைப்பாட்டையே எடுத்திருப்பார்.

எப்படியோ, தமிழர்கள் மீதான போரை நிறுத்துவதற்கு அரச மனங்கொள்ளாவிடில் அதுவே பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும். ★

---

### இறுதி வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 22

நேற்று வலி. கிழக்கில் படையினரின் 'சூரிய பிரகாஷ்' நடவடிக்கையை எதிர்த்து மோதிய சண்டையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட:-

வீ. வே. தவமுரளி (கனகலிங்கம் கருணாகரன் — வாழைச்சேனை மட்டக்களப்பு)

வீ. வே. காமதாசன் (பரமலிங்கம் வித்தியானந்தன் — தம்பிலுவில் அம்பாறை)

வீ. வே. எழிற்நம்பி (அன்ரனி சுகுமார் — சாம்பல்தீவு, திருமலை) ஆகியோரின் வித்துடல்கள் இன்று ஞாயிறு பிற்பகல் 3 00 மணியளவில் கொக்குவில் மேற்கு ஞான பண்டிதர் வித்தியாலயத்தில் மக்கள் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும்.

அங்கு மாலை 4 00 மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனிதவிதை குழிகளில் விதைக்கப்படும். (இ)

---

### கோப்பாய் பிரதேச செயலக ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 22

கோப்பாய் பிரதேச செயலக ஊழியர்கள், கிராம அலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர் அனைவரையும் இன்று ஞாயிறு காலை 8 00 மணிக்கு கோப்பாய் பிரதேசச் செயலகத்தில் சந்திக்கும்படி கோரப்பட்டுள்ளது

---

### எலக்ரோனிக் மின்மாற்றி களுவாஞ்சிக் குடியில் சேதம்

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் எலக்ரோனிக் மின்மாற்றி (டிரான்ஸ்போமர்) ஒன்று இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

களுவாஞ்சிக்குடியில் பட்டிருப்புச் சந்தைக்குச் சமீபமாக பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றியே அழிக்கப்பட்டது.

சந்தேக நபர்களை பொலீஸார் தேடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

---

### தீபாவளி வியாபாரம் இம்முறை சோபிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ் குடாநாட்டில் தீபாவளி வியாபாரம் இம்முறை சோபிக்கவில்லை.

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை தொடர்வதாலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து அலைவுற்றுக் கொண்டிருப்பதாலும் மக்கள் தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை.

நடைபாதை வியாபாரிகளும் இம்முறை வியாபாரத்தில் பெரிதாக அக்கறை காட்டவில்லை.

வங்கிகளில் பணப் புழக்கம் இல்லாததாலும் வியாபாரம் மந்தமடைவதற்குக் காரணம் என்று வர்த்தகர்கள் பலரும் தெரிவித்தனர். (ஒ-173-117)

---

சங்கானை வட்டத்தில் இன்று

### பாதுகாப்பு நிதி பெறும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22

சங்கானை வட்டத்தில் பின்வரும் இடங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேசிய பாதுகாப்பு நிதி பெற்றுக் கொள்ளுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பண்ணாகம், பனிப்புலம், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்மத்தி, தொல்புரம்கிழக்கு, தொல்புரம் மேற்கு மக்கள்மெய்கண்டான் பாடசாலையில் – நேரம் 9-00 மணி முதல் மாலை 5 00மணி வரை.

அராலி மேற்கு, அராலி மத்தி, அராலிகிழக்கு, அராலி தெற்கு மக்கள் முருகமூர்த்தி வித்தியாசாலையில் – நேரம் காலை 9-00 மணிமுதல் நண்பகல் 12-00 மணி வரை.

சங்கானை வட்டத்தில் ஏனைய கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள மக்கள் சித்தன்கேணி தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்) [இ]

---

### புத்தூர், ஆவரங்கால் பக்கமாக புகைமண்டலம்

நாவற்குழியில தெரிந்தது

யாழ்ப்பாணம், ஒக் 22

நாவற்குழிக்கு வடக்குப் பக்கமாக — தொலைவில் வான் பரப்பில் நேற்றுக் காலை புகை மண்டலம் எழுந்து பரவுவதைக் காண முடிந்தது.

புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் இருந்தே இந்த புகை மண்டலம் கிளம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவம் ஆக்கிரமித்துள்ள இந்தப் பகுதிகளில் உள்ள வீடுகள், பொதுமக்களின் உடைமைகள் மற்றும் வேலிகள் போன்றவற்றை படையினர் தீயிட்டுக் கொழுத்தி வருவதாக அறியப்படுகிறது. (ஒ-173-11-15)

---

### கொழுமபு நகரில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானார்.

இதேவேளை—

மற்றொரு இடத்தில் இரு தமிழர்கள் பெரும்பான்மையினர்த்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தாக்குதல் நடத்திய ஆயுதபாணிகள் எனச் சந்தேகித்தே இவர்கள் அடித்துக் கொல்லப்பட்டதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய பகுதியில் வசந்தியால் பீதியடைந்தகும்பல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

தாக்குதல் நடத்திய ஆயுதபாணிகளைத் தேடி அழிப்பதாகக் கூறிக் கொண்டு தலைநகரில் சில இடங்களில் சிங்கள இளைஞர்கள் நடமாடுகின்றது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாக இருப்பதாக பி. பி. ஸி செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-க-6)

---

### இலக்கிய ஒன்று கூடல்

குருநகர், ஒக். 22

யாழ். ஆரியகுளம் சந்தி தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இலக்கிய ஒன்று கூடல் நடைபெறவுள்ளது.

"புலம்பெயர்ந்தோர் இலக்கியம்" என்னும் விடயம் குறித்து எழுத்தாளர் சாத்தன் அங்கு உரையாற்றுவார். (ஓ-51)

---

### நூலகம் இயங்கவில்லை

செம்பியன்பற்று ஒக். 22

மருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் செம்பியன்பற்று பொது நூலகம் கடந்த சுமார் ஒரு மாதமாக இயங்கவில்லை என பொதுமக்கள் புகார் கூறுகின்றனர். (எ-36)

---

### வடமராட்சியில் மீன் விலைவீழ்ச்சி

செம்பியன்பற்று, ஒக். 22

வடமராட்சியில் மீனின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரின் நடமாட்டம் குறைந்துள்ளதால் மீனவர்கள் தாராளமாக கடற்றொழிலில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த வெள்ளி, சனிதினங்களில் ஒரு கிலோ சுறா மீன் 85 ரூபாவில் இருந்து 40ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. (எ-36)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவில்



தோற்றம்: 02 – 01 – 1936

மறைவு: 22 – 10 – 1992

### திருமதி
### ராணி பாலசிங்கம் (மம்மி)

காலங்கள் மூன்று கடந்தாலும்,
கண்ணொளி காத்து,
தன்னையே தீபமாக்கிய எம் அன்புத்
தாயை மறக்கத்தான் முடியுமா?

பெற்றோர், சகோதரங்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

3, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

[39104]

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா பரமகுரு

பண்ணாகத்தில் வசித்த திருமதி இராசம்மா பரமகுரு சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற மா. பரமகுருவின் அருமை மனைவியும், பண்டிதர் இராசகுரு (பிரசித்திபெற்ற நொத்தாரிசு), சற்குரு (முன்னாள் ஈழநாடு அச்சுக்கோப்பாளர்), காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் தாயாரும், மல்லிகாதேவி, சந்தபுஷ்கரணி ஆகியோரின் அருமை மாமியாரும், ச. பாஸ்கரகுரு, ச. தேவகுரு, ச. தனுஷா, இ. கலையரசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (22 – 10 – 95) இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
பண்டிதர் ப இராசகுரு
ப. சற்குரு
(மக்கள்)

பண்ணாகம்,
சுழிபுரம்

(39107)

### கந்தையா சிவசுப்பிரதாஸ்

(ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் – ஊர்காவற்றுறை AIB London)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளருமாகிய கந்தையா சிவசுப்பிரதாஸ் 18-10-95 அன்று கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா தம்பதிகளின் அன்புமகனும், திருமதி சி. மிதிலாதேவியின் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) அன்புக் கணவரும், திருமதி சி. மேகலா சிவமித்திரன், Dr சிவசுமித்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரது பாசமிகு தந்தையும், சிவநேசனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி கமலாம்பிகை, திருமதி காந்திமதி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான குலசேகரம் (Suprintendent - St.margrets Estate–Udappusellawa), மயில்வாகனம் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும், இராஜசிங்கம், திருமதி கனகேஸ்வரி, கனகசிங்கம் (Area Manager – Bank of Ceylon), திருமதி இரத்தினேஸ்வரி, Dr இரத்தினசிங்கம் (லண்டன்), பத்மேஸ்வரி, திருமதி ராணி (சிங்கப்பூர்), திருமதி லீலா (சிங்கப்பூர்), ஜெயபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரது தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இல. 2/3, சீவாளி றோட், கல்கிசையிலுள்ள அன்னாரதுஇல்லத்தில் இன்று (22-10 95) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இராஜசிங்கம் (மருமகன்)

இல. 47, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(39106)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22- 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கை, தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவே அரசு நேற்று இரவு அறிவித்தது.

நேற்றுக் காலை வரை 10 ஆயிரம் மெற்றிக் தொன் விமான எரிபொருள் உட்பட ஒரு லட்சத்து 73 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் எரிந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

நேற்றுக் காலை வரை 90 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய், 53 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல், 20 ஆயிரம் மெற்றிக் தொன் மண்எண்ணெய், 10 ஆயிரம் மெற்றிக் தொன் விமான எரிபொருள் என்பன எரிந்துள்ளன.

30 ஆயிரம் கலன் தீ அணைப்பு இரசாயனத்தை இந்தியா வழங்கியுள்ளதாகவும் மேலும் 80 ஆயிரம் கலன்கள் வழங்கப்படும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை எரிபொருள் சிக்கலால் கொழும்பில் போக்குவரத்து சீர்குலைந்துள்ளது. குறைந்த அளவு பஸ்கள் மட்டுமே கொழும்பில் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன.

எண்ணெய்க் குதங்கள் தீப்பற்றி எரிவதால் வெளியாகும் புகையினால் நீர் நிலைகள் மாசடையத் தொடங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-6-4]

### கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம் மாவட்டத்தில் பதவியாப் பகுதியில் 19 பேரும் கொல்லப்பட்டனர் என்று வெரித்தாஸ் தெரிவித்தது.

எனினும் இந்த மூன்று எல்லைக் கிராமங்களிலும் இறந்தோர் எண்ணிக்கை 73 என ஏ.எவ்.பீ. செய்தியாளர் அமல் ஜயசிங்க நேற்றிரவு தெரிவித்தார்.

இந்த கொலைகள் பற்றிய செய்தியை இலங்கை அரச பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் காலம் தாமதித்து நேற்று இரவு தான் வெளியிட்டன.

கொழும்பில் நேற்று இரவு ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்த பின்பே இது பற்றிய செய்தியை அரச பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் வெளியிட்டன என்று பி.பி.ஸி. தெரிவித்தது. [இ-4-6]

### வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைத் தடைமுகாமுக்கு வந்து சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பயணிகளை முதலில் வவுனியா சிங்கள மகா வித்தியாலயப் பகுதிக்கு படையினர் திருப்பி அனுப்பினர் என்றும் —

அங்கு வைத்து பயணிகளை தனித்தனியாக விசாரணைக்குட்படுத்திய சீ.ஐ.டி. பிரிவினர் பயணிகளை கண்டபடி தாக்கியதாக தாக்குதலுக்கு இலக்கான பின்னர் யாழ். வந்து சேர்ந்த பயணி ஒருவர் தெரிவித்தார்.

ஆத்திரமடைந்து காணப்பட்ட படையினர் பயணிகளை கைகளாலும் போத்தல்கள், பொல்லுகளாலும் தாக்கினர். இதனால் பலர் பலத்த உடற்காயங்களுக்கு உள்ளாகினர்.

பயணிகளை தீவிர விசாரணைக்கு உட்படுத்திய படையினர் அவர்களின் பெயர் விபரங்களை தனித்தனியாக பதிவு செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சோதனையின் போது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்ட பயணிகள் மாலை 4 மணிக்குப் பின்னரே தாண்டிக்குளம் ... அனுமதிக்கப்பட்டனர் (ஐ)

# விமான நிலையத்தில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு, ஒக். 22

எரிபொருள் குதங்கள் மீதான குண்டுத் தாக்குதலை அடுத்து கொழும்பு விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்துக்கு செல்லும் சகல வாகனங்களும் தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

பயணிகள் தமது பயண நேரத்துக்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன்னரே விமான நிலையத்துக்குச் சென்றுவிடுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ-6)

## 1 -ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகநாதர் தியாகராசா

திதி: 02 - 11 - 1995

ஓராண்டு சென்றாலும் - எம் உள்ளத்தில் வீற்றிருக்கும் - அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்

நிரந்தர முகவரி,
இல. 30,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

த. முகவரி:-
ஜோதி வாசா,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(39105)


நினைவிருக்கிறதா? நவம்பர் 4

பெற்றோர்களே!

இடம்பெயர்ந்து அவலப்பட நேர்ந்த நிலையிலும் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய உடனடிப் பணி.....

ஊனமாக்கும் போலியோவை தடுக்க உதவுவதே!

அதற்கான நாள் நவம்பர் 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org